

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. மற்றும் திருச்செங்கோடு கிழக்கு, மேற்கு நகர தி.மு.க. சார்பில், திராவிட மாடல் அரசின் 5 ஆண்டுகால சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துரைக்கும் வகையில் மாபெரும் சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், நாமக்கல் மேற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி, திருச்செங்கோடு மேற்கு நகர கழகப் பொறுப்பாளர் ஆர்.நடேசன், கிழக்கு நகர கழகப் பொறுப்பாளர் தா.கார்த்திகேயன் மற்றும் மாநில, மாவட்ட, நிர்வாகிகள், சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர்கள், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு நேற்று (03.02.2026) சென்னை, வில்லிவாக்கம் சௌமிய தாமோதரப்பெருமாள் திருக்கோயிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து நிகழ்ச்சியில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் செயல் அலுவலர் திருமதி சு.நித்தியகலா மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### ‘உலகம் உங்கள் கையில்’ திட்டத்தில்

# கரூரில் 3,137 மாணவர்களுக்கு மடிக்கணினிகள்!

## வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார்!

கரூர், பிப். 5 –

உலகம் உங்கள் கையில் திட்டத்தில் 3,137 கல்லூரி மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகள், 15 பேருக்கு நடமாடும் காய்கறி விற்பனை வண்டிகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார்.

கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கூட்ட அரங்கில் மடிக்கணினி வழங்கும் விழா நடைபெற்றது. கரூர் மாவட்ட கலெக்டர் ம்.தங்கவேல் தலைமை வகித்தார். கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி மடிக்கணினிகளையும், நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.அவர் பேசியதாவது:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘உலகம் உங்கள் கையில்’ என்னும் திட்டத்தின் கீழ் 20 இலட்சம் மடிக் கணினிகள் வழங்குவதற்கான அறிவிப்பை வெளியிட்டு தொடங்கி வைத்ததை அடுத்து,

கரூர் மாவட்டத்தில் ஏறத்தாழ 5204 மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது. இன்று ஒரு நாளில் மட்டும் 3.137 மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கக்கூடிய நிகழ்ச்சிகள் நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும், அந்தந்த கல்வி நிறு வனங்களுக்கே நேரில் சென்று வழங்கக்கூடிய ஒரு சிறப்பான நிகழ்வாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

முதலமைச்சர் அவர்கள், அரசுத் திட்டங்கள் மூலமாக கல்விக்கு முன்னுரிமை கொடுத்து, என்ன தேவை என்பதை உணர்ந்து செயல்படுகின்றார்கள். 20 லட்சம் குழந்தைகள் பயன்பெறக்கூடிய ஒரு சிறப்பு வாய்ந்த திட்டமாக காலை உணவுத் திட்டம், அதே போல ‘தமிழ்ப் புதல்வன். புதுமைப் பெண் மூலமாக 12 லட்சம் மாணவ மாணவிகள் மாதம் 1000 ரூபாய் உதவித் தொகையைப் பெறக்கூடிய ஒரு மகத்தான திட்டம். தொழிற்சாலைகளில் மகளிர் அதிகம் பணிபுரியக்கூடிய மாநிலம் தமிழ்நாடு என்ற நிலையை உருவாக்கியதுடன், உயர்கல்வியில் சேரக்கூடிய மாணவ மாணவிகளுடைய எண்ணிக்கை இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் 47 விழுக்காடு முதலிடம் என்ற பெருமையையும் உருவாக்கித் தந்திருக்கின்றார்கள்.

இங்குள்ள மாணாக்கர்கள் ஒரு கனம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். யார் நம்மை ஆள வேண்டும்? நமக்கான திட்டங்களை யார் செயல்படுத்துவார்கள்? நம்முடைய மாநிலத்தினுடைய வளர்ச்சிக்கு, நம்முடைய பகுதியினுடைய வளர்ச்சிக்கு எந்த அரசு துணை நிற்கும்? நம்மைப் பற்றிச் சிந்திக்கக்கூடிய முதலமைச்சர் யார்?. என்பதை நாம் நினைவு கூர்ந்து அவர்களுக்கு ஆதரவாக உறுதுணையாக இருந்திட வேண்டும் என்ற வேண்டுகோளை உங்களிடத்தில் நான் அன்போடு வைக்கின்றேன்.

நாம் ஒரு ரூபாய் வரியைச் செலுத்துகின்றோம் ஒன்றிய அரசிற்கு, அவர்கள் திருப்பி நமக்குத் தருவது வெறும் 20 பைசா. மாநில அரசினுடைய நிலைமை என்பது நாம் செலுத்துகின்ற வரியைக் கூட முழுமையாக ஒன்றிய அரசு வழங்காத சூழலில்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசினுடைய நிதிகளைக் கொண்டு பல்வேறு சிறப்புத் திட்டங்கள் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணம், புதுமைப் பெண். தமிழ்ப் புதல்வன், நான் முதல்வன், மக்களைத் தேடி மருத்துவம் இல்லம் தேடி கல்வி, காலை உணவுத் திட்டம். 2 லட்சம் விவசாயி களுக்கான இலவச மின் இணைப்பு உங்களுடன் ஸ்டாலின் திட்டம் இப்படிப் பல்வேறு சிறப்புத் திட்டங்களை, இன்னும் பல திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள்.

முதலமைச்சர் அவர்களுக்கு நம்முடைய மாணவச் செல்வங்கள் உறுதுணையாக இருந்திட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார் .

இதனைத்தொடர்ந்து. கரூர் அரசு மருத்துவக் கல்லூரி 153, அரசு தொழில்நுட்பக் கல்லூரி, வெண்ணெய்மலை 80. CSI தொழில்நுட்பக் கல்லூரி 58. சக்தி நர்சிங் பெண்கள் கல்லூரி, கோடங்கிப்பட்டி 18. சக்தி நச்சிங் கல்லூரி 44. கரூர் பாலிடெக்னிக் கல்லூரி 47. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி 329 என மொத்தம் 3,137 மாணவமாணவியர்களுக்கு மடிக்கணினிகளை செந்தில்பாலாஜி வழங்கினார்.

மேலும் தோட்டக்கலைத்துறை சார்பாக தேசிய தோட்டக்கலை இயக்கம் திட்டத்தின் கீழ் 15 பயனாளிகளுக்கு தலா ரூ.15,000 மானியத்தில், நடமாடும் காய்கறி விற்பனை வண்டிகள், வேளாண்மை த்துறையின் சார்பாக தார்ப்பாலின் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், மண்டல குழு தலைவர்கள் எஸ்பி. கனகராஜ், ஆர்.எஸ்.ராஜா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குதர் மரு.வீரபத்திரன், அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர்(பொ) மரு.ராஜா, வேளாண்மை இணை இயக்குநர் சிங்காரம். தோடக்கலைத் துறை துணை இயக்குநர் தியாகராஜன், மற்றும் பலர் கலந்துகொண்டனர்.




பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு அரசு தலைமைக் கொறடா க.இராமச்சந்திரன் 03.02.2026 அன்று சென்னை, சிந்தாதிரிப்பேட்டை ஆதிபுரீஸ்வரர் மற்றும் ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, பொதுமக்களுடன் உணவு அருந்தினார்.

### மாவட்டச் செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ. – மேயர் சத்யா பங்கேற்பு!

# ஓசூர் மாநகராட்சி பகுதிகளில் திட்டப் பணிகள்!

## அமைச்சர் அர.சக்கரபாணி துவக்கி வைத்தார்!

கிருஷ்ணகிரி, பிப். 5 –

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாநகராட்சி, ஜீஜீவாடி அரசு மேல் நிலைப்பள்ளியில், சமூக பொறுப்பு நிதி மூலம் ரூ.73 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 4 கூடுதல் வகுப்பறை கட்டிடம், ஓசூர் மாநகராட்சி, மூக்காண்டப்பள்ளியில் தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் புதிய கிளை ஆகியவற்றை திறந்து வைத்து,

ஓசூர் மாநகராட்சி, தேன்கனிக் கோட்டை பேரூராட்சி, கெலமங்கலம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ரூ.35 கோடியே 83 இலட்சம் மதிப்பில் தார்சாலைகள் மற்றும் சிமெண்ட சாலைகள் அமைக்கும் பணிகளை துவக்கி வைத்து, சப்தகிரி திருமண மண்டபத்தில் 1,107 பயனாளிகளுக்கும், சூளகிரி வட்டம், தியானதுர்க்கம் பகுதியில் 156 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களை மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் , கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் பிரகாஷ் எம் எல் ஏ, தளி சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரன், ஓசூர் மாநகராட்சி மேயர் சத்யா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன் ஆகியோர் முன்னிலையில்) வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் .கவிதா, மாநகராட்சி ஆணையாளர் முகமது ஷபீர் ஆலம் , அவைத்தலைவர் யுவராஜ் ,

ஓசூர் மாநகராட்சி துணை மேயர் ஆனந்தய்யா , பொருளாளர் சுகுமாரன், மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன், மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை செயலாளர் மாதேஸ்வரன்,

தேன்கனிக்கோட்டை பேரூராட்சி தலைவர் சீனிவாசன், , மண்டல குழு தலைவர்கள் , ரவி, சென்னீரப்பா, தளி முன்னாள் ஒன்றிய குழு தலைவர் சீனிவாசலு, ஒன்றிய செயலாளர்கள் கஜேந்திர மூர்த்தி, ஸ்ரீதர், பாக்யராஜ், நாகேஷ், ரகுநாத், கருணாகரன்

மற்றும் முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.





சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வாழப்பாடியில் உள்ள மு.க.ஸ்டாலின் அறிவாலயம் முன்பு பேரறிஞர் அண்ணா அவர்களின் 57 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., தலைமையில் தி.மு.க.வினர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் மாவட்ட அவைத்தலைவர் முரா.கருணாநிதி, மாவட்ட துணை செயலாளர்கள் க.சுரேஷ்குமார், கு.சின்னதுரை, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், ஒன்றிய செயலாளர்கள் மாணிக்கம், சதீஷ்குமார், சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், மூர்த்தி, மருதமுத்து, பேரூர் செயலாளர்கள் செல்வம், வெங்கடேஸ்வரன், தமிழ்செல்வன், சோமசுந்தரம் , முனைவர் சீனிவாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா. நாகன்

**பிப்ரவரி 5 (2024)**



**திராவிடர் கழகத்தில் பணியாற்றி, கழகம் தொடங்கியபோது அதில் தன்னை இணைத்துக் கொண்டு தனது பகுதி முழுவதும் கிராமம், கிராமமாக சென்று கழகம் வளர்த்தவர்.**

**பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் அணுக்கத் தொண்டர்களில் ஒருவராக இருந்தவர்.**

**உத்திரமேரூர் வட்டச் செயலாளராக பணியாற்ற தொடங்கி, 1977 முதல் 2014 வரையிலான 37 ஆண்டுகள் தொடர்ந்து உத்திரமேரூர் ஒன்றியச் செயலாளராக பொறுப்பு வகித்தவர். பின்னர், தலைமைச் செயற்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.**

**உத்திரமேரூர் பேரூராட்சி கவுன்சிலர், பேரூராட்சி தலைவர், கூட்டுறவு சங்க இயக்குநர், தலைவர் என பல்வேறு பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்தமும்முனைப் போராட்டம் உள்ளிட்ட அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு 18 முறைக்கு மேல் சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### செய்தி மக்கள் தொடர்புத் துறையின்

# முன்னாள் இணை இயக்குனர் இரா.பரதன் மறைவு!

## கழகத்தினர் – அரசு அலுவலர்கள் அஞ்சலி!

*செங்கோட்டை, பிப், 5 -*

*செய்தி மக்கள் தொடர்பு துறையின் முன்னாள் இணை இயக்குனர் இரா.பரதன் அவர்கள் 2.2.2026 அன்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*

*இவர் திராவிட இயக்கத்தின் மீது அளவற்ற ஈடுபாடு மிக்கவர். இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் மாணவர் அணியில் தன்னை இணைத்து, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திராவிட கொள்கை சித்தாந்தத்தை பறைசாற்றியவர்.*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடத்தில் மிகுந்த பாசமும், ஈடுபாடும் கொண்டவர்.*

*இவர் 1970ஆம் ஆண்டு செய்தித் துறையில் மக்கள் தொடர்பு அலுவலராக பணியில் சேர்ந்து 2006 ஆம் ஆண்டில் பணி ஓய்வு பெற்றார். இவர் பணியாற்றிய அலுவலகங்களில் பணியாளர்களிடத்தில் மிகுந்த அக்கறையும் பாசமும் கொண்டவர். மேலும், மிகச்சிறந்த பேச்சாளர். தனது கணீர்குரலில் அரசு நிகழ்ச்சிகளில் அனைவரது கவனத்தை தனது பேச்சால் ஈர்த்தவர்.*

*இவரின் பணிக்காலத்தில் மற்றவர்களுக்கு வழிகாட்டியாகவும், பண்பாளராகவும், துறையின் ஜாம்பவானாகவும் திகழ்ந்தவர். இவரது மறைவு செய்தித் துறையினரிடையே மிகுந்த வேதனையையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தி*



*உள்ளது.*

*இவர் பணிக்காலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம், அரசு திட்டங்களை செயல்படுத்துவதில் மிகுந்த நன்மதிப்பை பெற்றவர். மேலும், தனது அரசு பணி காலத்தில் சிறந்த எழுத்து திறமையாலும், ஒப்பற்ற நிர்வாக திறனுடனும், அரசின் முக்கிய திட்டங்கள் சாதனைகளை சிறப்பாக செயல்படுத்தியவர். கன்னியாகுமரியில் அமையப்பெற்ற அய்யன் திருவள்ளுவர் சிலை, வள்ளுவர் கோட்டம், உலகத் தமிழ் மாநாடு மற்றும் பல முக்கிய நிகழ்வுகளில் சிறப்பாக பணியாற்றி கலைஞர் இடத்தில் பாராட்டுகளைப் பெற்றவர்.*

*இவர் உடல்நலக்குறைவால் தென்காசி மாவட்டம் செங்கோட்டையிலுள்ள தமது இல்லத்தில் இயற்கையெய்தினார்.*

*அன்னாரது மறைவுச் செய்தியறிந்து செய்தித் துறை அலுவலர்களும் கழகத் தினரும் அன்னாரது இல்லம் சென்று மறைந்த பரதன் அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருமதி பொற்செல்வி இளமுருகு

**பிப்ரவரி 5 (2013)**



**தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரிடம் மிகுந்த பற்றும் மதிப்பும் கொண்டவரும் – தலைவர் கலைஞர் அவர்களிடம் நீண்டகாலமாக அன்பும் பாசமும் காட்டி, தலைவரின் குடும்பத்தாரோடு இரண்டறக் கலந்துவிட்டவரும் – திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்ந்தவர் இவர்.**

**தி.மு.க. மகளிர் அணி துவக்கப்பட்ட காலத்திலிருந்தே மகளிர் அணியில் இடம் பெற்றதோடு, மாநில மகளிர் அணி தலைவராகவும் பொறுப்பு வகித்தவர். 1987ஆம் நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் “கலைஞர் விருதினை” அளித்து சிறப்பு செய்தார்.**

**“1957இல் நான் அறிஞர் அண்ணா அவர்களின் ஆணைப்படி, திருச்சி மாவட்டம், குளித்தலைத் தொகுதியில் போட்டியிட்டபோது, திருமதி பொற்செல்வி இளமுருகு அவர்கள் தனது கணவரோடு அரும்பாடுபட்டு, கழகப் பணியாற்றி, என்னுடைய தேர்தல் வெற்றிக்கு கடுமையாக உழைத்தவர் என்பதை நான் என்றைக்கும் மறந்திட முடியாது” என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**